
# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை.

மலர் 1 | விரோதி௵—புரட்டாசிமீ
1949௵ செப்டம்பர்—அக்டோபர்மீ | இதழ் 6



பரமசிவனால் சிருஷ்டிக்கப்பட்ட ஆறு ஒளிச்சுடர்களை வாயுதேவனும், அக்னி தேவனும், ஈசனின் கட்டளைப்படி கங்கையில் சேர்ப்பித்தல்
(கந்த புராணச் சித்திரவிளக்கம்—4)

விலை 2½ அணா

## பொருளடக்கம்


பக்கம்

1. பேசா அனுபூதி (திருப்புகழ் மணி) ... 1
2. திருவருட்பா ஆசிரியர் வரலாறு ... 3
(மொ. அ. துரை அரங்கசாமி)
3. திட பக்தி (இராமச்சந்திர அய்யர்) ... 12
4. கந்தரநுபூதி (கு. தங்கவேலுத் தேவர்) ... 16
5. மயிலேறிய மழவன்
(சே. த. இராமலிங்கம் பிள்ளை) ... 21
6. பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்
(க. சோமசுந்தர செட்டியார்) ... 26
7. ஸ்ரீ வைஷ்ணவர் செல்வம் (V. S. V.) ... 29
8. சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டம் ... 32



நம்பிக்கை பெற்ற நஞ்சன்கூடு மருந்துகள்.



குழந்தைகளுக்கு
- 12 காஸ்மஸ் கஸ்தூரி மாத்திரை.
- 18 கர்ஜன் கோரோஜனை மாத்திரை.
- 15 பாலக்ஸ் பேதியாக மாத்திரை.

குடும்ப அவசியங்கள்
- 99 ஜ்வரேக் எவ்வித ஜ்வரங்களுக்கும்.
- 77 காலரெக்ஸ் அஜீர்ணபேதி காலராவிற்கு.

தின உதவிகள்
- 55 ஜிஞ்சிப் அஜீர்ண பித்த சமனி.
- 78 கூலெக்ஸ் உஷ்ண, சமன, ஸ்நான தைலம்.
- 61 நஞ்சன்கூடு பல்பொடி (பயோரியா) பல் உபாதைகளுக்கு.



கூந்தல் செழிப்புக்கு
காஷ்மீர் குஸும்
என்ற மலர் மூலிகையை உங்கள் எண்ணெயுடன் கலந்துகொள்க.

சிறந்த சரும வைத்தியன்
ஸான்டலக்ஸ் சந்தனக் களிம்பு
காயம், தீப்புண், சொறி, சிரங்கு, பரு, குணமடைய.

மைசூர்
பிரேமலீலா ஊதுவத்திகள்
எமார்ஜஸ், அகர்ஸ்பெஷல், அம்பர்ஸ்பெஷல், ஜவாது.

யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ் 1.

“மாலா”
வாசனைகள்
*
அத்தர்கள்
*
வாசனை மெழுகு (கோன்)
*
கைக்குட்டை சென்டு
*
சில்க் பைகள்
(ஆடைகளைக் காப்பாற்ற பெட்டியில் வைக்க)

# அமிர்தவசனி

தெய்வீக மாதப்பத்திரிகை

ஆசிரியர்: சு. முத்துஸ்வாமி

"எல்லாரும் இன்புற் றிருக்க நினைப்பதுவே
அல்லாமல் வேறொன் றறியேன் பராபரமே"

மலர் 1 } விரோதி௵ புரட்டாசி௴ 1949 செப்டம்பர்—அக்டோபர்௴ { இதழ் 6


## பேசா அனுபூதி

(ஸ்ரீ திருப்புகழ் மணி)

*சென்னை ஸ்ரீசென்ன மல்லீஸ்வரர் ஆலயத்தில் புதிதாக திறவப்பட்ட அனுபூதி மண்டபத்தில் நிகழ்ந்துவரும் அடியார் ஞாயிறு திருக்கூட்டத்தின் முதல் ஆண்டு பூர்த்தி யன்று நடந்த அனுபூதி விளக்கத்தின் சாரம்.*

சென்ற ஞாயிற்றுகிழமையில் (28-8-49) கூடிய தொண்டர் குழாம் பல விதத்திலும் மறக்க முடியாததாக நிகழ்ந்து விட்டது. அனுபூதியை அனுபவிக்க ஆரம்பித்த அன்பர்களின் ஐம்பத்திரண்டாவது ஞாயி றுகும். ஒரு ஆண்டு முற்றியதென்றே சொல்லலாம். இந்த ஆண்டு விழாவை ஆயிரக்கணக்கான தாய்மார்களும் தந்தையர் களும் வந்து சிறப்பித்தார்கள். பேரன்பர் ஒருவர் யாவருக் கும் கற்கண்டு வழங்க, மலர்ந்த முகத்தால் புன்னகை பரப் பிய தொண்டர்கள் தங்கள் ஆர்வத்தால் அலங்கரிக்க, மற்

---

வேலா இமையவர் பெருமானே
சூழா வகையருள் புரிவாயே.

றும் ஒருவர் சந்தனக் குழம்பால் அடியார்களைப் பூஜித்தார். அன்றைய தினம் நம் பட்டணம் ஐகோர்ட்டு நீதிபதி கனம் பஞ்சாபகேச சாஸ்திரி அவர்கள் மேடையில் விஜயம் செய்தார்கள். ப்ரமராம்பாள் பக்கத்தில் நின்று ஆசி அளிக்க முருகன் பின்னின்று ஆர்வம் ஊட்ட அடியார்கள் குழாத்தில் 'பேசா அனுபூதி பிறந்ததுவே'. எங்கே பிறந்தது? அனுபூதி மண்டபத்திலே. இருபது தூண்கள் நிறுத்திய பெரிய மண்டபத்தைக் கட்டி விட்டார்கள் இந்த ஒரு வருஷத்துக்குள். அழகான வர்ணங்களில் தூண்களை நிறுவி அனுபூதி ஐம்பத்தொரு பாடல்களையும் ஸ்திரமாகவே மேற்படி கம்பங்களில் எழுதிவிட்டார்கள். அருமையான காக்ஷி. அனுபவமும் அவ்வாறேதான். அனுபூதி பாராயண பலனும், முருகன் ரக்ஷாமாலையும் இரண்டு கம்பத்தில் எழுதப் பட்டுள்ளன. மேரு பர்வதத்தில் பாரதம் எழுதிய மேன்மையை ஒக்கும். இவையெலாம் முருகன் அருளேயன்றி வேறல்ல.

தூசா மணியும் துகிலும் புனைவாள்
நேசா முருகா நினதன் பருளால்
ஆசா நிகளம் துகளா யினபின்
பேசா அனுபூதி பிறந்ததுவே.

என்ற பாட்டைப்பற்றி உபன்யசிக்கும் நாள்.

முருகன் மணியும் ஒளியும்தான் சுப்ரமணியாய் விளங்குபவன். மணிபோன்று இருப்பதலாலல்லவோ முருகனைப் பொன்னே மணியே என்று அருணகிரியார் பாடியதும். அவ்வாறே சிவனை அப்பர்ஸ் வாமிகளும் பாடியுள்ளார். "பொன்னானாய் மணியானாய்" என்றார் அப்பர். இதயத்திலே இடைவிடாது அன்பாய்வைத்துக்கொண்டாடினாள் வள்ளி

---

கூள னெனினுமெனை நீயு னடியரொடு
கூடும் வகைமை யருள்புரிவாயே.

முருகன் ஞாபகத்தை. அதனால் முருகனும் அவள் இதயத்தில் வந்து விட்டான். "இலகு சிலைவேடர் கொடியினதி பார இருதன விநோதப் பெருமாளே" என்று திருப்புகழில் பாடியுள்ளார். அந்த மணியை அன்பெனும் துகிலால் மறைத்து ஆசாபாசங்களை யெல்லாம் ஓட்டிவிட்டு பேசாத அநுபூதி பெற்று உய்ந்தாள் வள்ளி. இவ்வாறே எல்லோரும் முருகன் அருள்பெற்று உய்வாராக. தொண்டர் குழாம் என்றும் எங்கும் ஓங்குக.

# திருவருட்பா ஆசிரியர் வரலாறு (கேட்டது)

திரு. வித்வான் மொ. அ. துரை அரங்கசாமி, B. O. L., M. O. L.

மலர் ஒன்று, இதழ் மூன்றில் மிகுதியாகக் கடவுளருளும், அதனுடன் தன் முழு முயற்சியும் கொண்டுதான் கடவுளை அடைய முடியும்; அதனைப் பலப்பல வகையாக உணர்த்துவதே திருவருட்பா என்னும் தேனினு மினிய நூலாகும்" என்று கூறினோம். திருவருட்பாவின் துறைகளுள் புகுவதற்குமுன் அதன் ஆசிரியர் வரலாற்றினை அறிவது ஏற்புடைத் தாகும். எனவே அவர் வரலாற்றினைப் பற்றிச் சுருக்கமாக இனிக் கூறுவோம்:

கேட்டதும், கண்டதும் என இரண்டு வகைகளாக அவர் வரலாற்றினை அமைத்துக் கூறலாம். நமக்கு வழிகாட்டிகளாக இலங்கிய பெரியார்களுடைய வரலாறுகள், முற்றும் உண்மை என மதித்தற்கு இயலாமல் உள்ளன. அவ்வாறு இருப்பதற்கு அடிப்படை, அவர்களிடம் கொண்ட பேரன்பின் மிகுதியால், அவர்களைப்பற்றி மிகமிகச் சிறப்பாகக் கூறவேண்டும் என்பதுகொண்டு, புனைந்துரைகள் நிரம்பக் கூட்டி, அவர்களைப்பற்றி அறிந்தவர்கள் வழங்கினமையே ஆகும். ஆனால், அப்பெரியார்களுடைய வாய்

---

உரையற் றுணர்வற் றுயிரெய்த் தகொடிக்
குனகற் பிணையற் றரவேணும்.

மொழிகளாகக் கிடைத்துள்ள நூல்களாகிய அகச்சான்றுகள் கொண்டு, புனைந்துரைகளாகிய மாசு நீக்கி, உண்மை வரலாறுகளைக் கண்டு கொள்ளலாம். எனவே, கேட்ட வரலாறுகள்: புனைந்துரைகள் கலந்தனவாக இருக்கும்; கண்ட வரலாறுகள்: அப்புனைந்துரைகள் இன்றி உண்மை வரலாறுகளாகத் திகழும்.

*திருவருட்பா ஆசிரியரைப்பற்றிய கேட்ட வரலாறு யாது?*

திருவருட்பாவினை நமக்கு வழங்கிய பெரியார்: திருவருட் பிரகாச வள்ளலார் என்னும் சிதம்பரம் இராமலிங்க சுவாமிகள். அவர்கள் பிறந்த நாளானதால், கலி 4925 சுபானு ஆண்டு புரட்டாசித் திங்கள் இருபத்தோராம் நாள், ஞாயிற்றுக்கிழமை(5-10-1823), அன்பர்கள் உள்ளத்தை விட்டு நீங்குதல் இல்லாது நிலவும் புகழ் மிக்க நன்னாள் ஆயிற்று.

சோழ நாட்டுத் தென் ஆர்க்காடு மாவட்டத்தில், உலகிற்கே இதய கமலம் என்று கூறப்படும் சிதம்பரத்தின் வட மேற்கில் பத்துக் கல் தொலைவிலுள்ள மருதூர் என்பதே வள்ளலார் பிறந்ததால் எல்லையில்லாப் பெருமை பெற்ற ஊராகும்.

இராமைய பிள்ளை என்பார்க்கு, 'யானே உற்ற வாழ்க்கைத் துணைவி யாவேன்' என்று போட்டி போட்டுக் கொண்டு ஐவர் மங்கையர் ஒருவர்பின் ஒருவராக அமைந்து, அவ்வாறு துணையாக நிலைபெற்று நிற்கும் வலியில்லாதவராய் மாண்டொழிந்து போக, நிலைபெற்று உண்மை வாழ்க்கைத் துணைவியாராக ஆகும் முறையாக வந்த சின்னம்மையார் என்பவரே வள்ளலாரைப் பெறும் பேறு பெற்றவர்.

சபாபதி பிள்ளை, பரசுராம பிள்ளை என்னும் ஆண்மக்கள் இருவரும், சுந்தரம்மாள், உண்ணாமுலையம்மாள் என்னும் பெண் மக்கள் இருவரும், வள்ளலார் தோன்றுவதற்கு முன் சின்னம்மையாரிடத்துத் தோன்றினவர்கள். மூத்தவர் நால்வருள் இறுதியாகத்

---

செறிவு மறிவு முறவு மனைய
திகழு மடிகள் தரவேணும்.

தோன்றிய உண்ணுமுலை அம்மையாருக்குப் பத்தாண்டுகள் ஆன பின்பே வள்ளலார் தோன்றினர். கருணிகர் குலம் சிறக்கவும், உலகம் தழைக்கவும் தோன்றிய வள்ளலார் பிறப்பில், ஒரு புதுமை உண்டு.

கற்பினுக் கணியாய் இலங்கிய சின்னம்மையார், விருந்தினரை ஓம்புதலில் ஒப்புயர் வற்ற பெருமையும் புகழும் உடையவர். ஒரு நாள் சிவயோகியார் ஒருவர், 'பசி, பசி' என்று கூறிக் கொண்டே சின்னம்மையார் இல்லத்திற்குள் புகுந்தார். அவர் வயிறும், உள்ளமும் குளிர்ச்சி யடையும்படி, சின்னம்மையார், அவருக்கு அறுசுவை உண்டி படைத்தார். உண்டு உள்ளம் குளிர்ந்த சிவயோகியார், அளவிலா மகிழ்ச்சியடைந்து சின்னம்மை யாரிடம்திரு நீறு சிறிது கொடுத்து, "அருளம்மையே" இந்தத் தெய்வத் திரு நீற்றை உட் கொள்ளுக. இதனல் சமரச சன்மார்க் கத்தை உலகில் நிலை நிறுத்த வல்ல நன்மக னொருவனைப் பெறுதற்குரிய கருக்கொள்ளப் பெறுவாய் என்றார். சின்னம்மை யார் அதனை அன்போடும், மகிழ்வோடும் உண்டார். சிவயோகியார் மறைந்தார். அதுபோது அருட்பேரொளி ஒன்று தோன்றிக் கண் வழியாக அம்மையார் உள்ளகத்தே புகுந்தது. வயிற்றினுள் கரு வற் படும் குறிகள் அம்மையார்பால் உடனே ஏற்பட்டன.

வெளியே சென்றிருந்த இராமைய பிள்ளை இல்லம் வந்து புகுந்ததும், சின்னம்மையார், நிகழ்ந்த நிகழ்ச்சிகளை அவரிடம் கூற, அவர் திருவருளை வியந்து சிந்தனை செய்வாராயினர்.

பத்துத் திங்கள் கழிந்தன. சின்னம்மையார் கரு வுயிர்த்தார். பிறந்த குழந்தைக்குச் சமரச நினைவோடேயே இராமலிங்கம் எனப் பெயரிட்டுப் பூரிப்படைந்தார் இராமையப் பிள்ளை. மழை வளம் இல்லாது வறண்டு கிடந்த மருதூர் இராமலிங்கம் பிறந்த நாள் தொடங்கி, மழை வளம் மிகுதியும் பெற்றுச் செழிப்புற்றது. தாவொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமாகக் குழந்தை

---

கருத அருளி யெனது தனிமை
கழிய அறிவு தரவேணும்.

வளர்ந்து வரலாயிற்று. ஆசிரியர் பணியும், கணக்கு எழுதுதல் பணியும் ஒருங்கே பார்த்து வந்த இராமைய பிள்ளை, சிவயோகியார் அருளால் பெற்றெடுத்த பிள்ளைப் பெருமானிடம், அன்பும் மதிப்பும் ஒருங்கே கொள்ளலானார். ஊரார் யாவரும் பெற்றோரையும் பிள்ளையையும் பெரிதும் பயபக்தியுடன் போற்றினர்.

ஐந்தாம் திங்கள் பிறந்தது. அத் திங்களில் ஏதாவதொரு கோயிலுக்குப் போய் வருவது கருணீகர் மரபு. இராமையா பிள்ளை தம் மனைவியொடும் பெற்ற குழந்தையொடும் சிதம்பரத்திற்குச் சென்றனர். கூத்தப் பெருமான்முன் குழந்தை இராமலிங்கத்தைக் கைகளில் ஏந்திக் கொண்டே, இராமையப் பிள்ளை இறைவனை வணங்கினர். அப்பைய தீட்சிதர், கூத்தப் பெருமானுக்குக் கருப்பூர ஆராதனை செய்தனர். குழந்தை இராமலிங்கம் கருப்பூர ஒளியூடே விளங்கும் இறைவன் திருமுகத்தை இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டேயிருந்து பின், கலகல வென்று நகை செய்தது. தீட்சிதர், குழந்தையை உற்றுநோக்கினர். பாம்பின் கால் பாம் பறியும். குழந்தையின் நகைப்பில் ஓர் உண்மை கண்டு வியப்பெய்தினர். தீட்சிதர், இக் குழந்தை அம்பலவாணரின் அருட் குழந்தையே யாகும் என்று கூறி, இராமையப் பிள்ளையையும், அவர் மனைவியையும், குழந்தையையும் தீட்சிதர், தம்இல்லத்திற்கு அழைத்துச் சென்று, நல் விருந்துணவு அளித்து ஓம்பிச் சில நாட்கள் வரையில் தங்க வைத்திருந்து, பிறகு மருதூருக்கு அனுப்பினர். இந்த நிகழ்ச்சி தெரிந்ததும், யாவரும், விளையும் பயிர் முளையிலே தெரியும் என்று குழந்தையை வியந்து பாராட்டினர்.

இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இராமைய பிள்ளை நெடு நாள் வாழக் கொடுத்து வைக்கவில்லை. மூத்தவர் சபாபதிப் பிள்ளை மீது குடும்பச் சுமை வீழ்ந்தது. சின்னம்மையார் பிறந்த ஊர் பொன்னேரி. தம்பிமாரோடும் தங்கைமாரோடும்,

---

அருள தருளி யெனையு மனதொ
டடிமை கொளவும் வரவேணும்.

அன்னையாரோடும் சபாபதிப் பிள்ளை பொன்னேரிக்குச் சென்று அங்கிருந்த தம் பாட்டியார் பாதுகாப்பில் சில நாட்கள் தங்கியிருந்து பின்னர் சென்னையை அடைந்தார் அங்கே புராணச் சொற்பொழிவுகள் ஆற்றுதல் வாயிலாகச் சபாபதி பிள்ளை சிறிதளவு பொருளீட்டிக் குடும்பத்தைப் பாதுகாத்து வந்தார். காஞ்சிபுரம் சபாபதி முதலியார் என்பவர், அப்போது சென்னையில் ஒப்புயர்வற்ற பெரும் புலவராகத் திகழ்ந்தார். அவரிடம் தமிழ் மொழியை ஐயந் திரிபறக் கற்கும் பேறு சபாபதிப் பிள்ளையவர்கட்குக், கிடைத்தது. அதனால் சபாபதிப் பிள்ளை சிறந்த புலமை பெற்றுச் சொற்பொழி வாற்றுதலில் பெரும் புகழ் உற்றுக் குடும்பத்திற்கு வேண்டும் எல்லாவற்றையும் குறைவற எய்துவாரானர்.

குழந்தை இராமலிங்கத்திற்கு ஐந்தாம் ஆண்டு பிறந்தது. கல்வி தொடங்குதற் குரிய ஆண்டு அதுவே ஆகும். தாமே ஆசிரியராய் அமர்ந்து, சபாபதி பிள்ளை, இராமலிங்கத்திற்குக் கல்வி கற்பிக்க விழைந்தார். ஆனல் அவரிடம் இராமலிங்கம் செவ்வையாகப் படிக்க முற்படவில்லை. எனவே, சபாபதிப் பிள்ளை, தம் ஆசிரியர் சபாபதி முதலியாரிடமே தம் தம்பியாரைக் கல்வி பயில அனுப்பினர். அவரிடமும் இராமலிங்கப்பெருமானர் ஒழுங்காய்ப் பாடம் படிப்பதில்லை.

படிப்பதில்லை யெனில் அவர் செய்துவந்த செயல் யாது? விளையாடுவாரா? தூங்கியே கிடப்பாரா? வேடிக்கையாய்ப் பேசிக் காலம் கழிப்பாரா? சென்னையில், கந்தகோட்டத்தில் உள்ள முருகப் பெருமானையே அவர் நினைந்தபடி இருப்பார்; அவர்மீது தாமே பாட்டியற்றிப் பாடுவார்; ஒவ்வொரு நாள் மாலையிலும், கந்தப் பெருமானர் கோயிலுக்குச் செல்வார்; வணங்குவார்; கேட்டவரும் உள்ளம் உருகும் வண்ணம் பண்ணோடு பாடித் தம்மை மறந்து நிற்பார். சபாபதி முதலியார், இராமலிங்கப் பெருமானரின் ஒதாதுணரும் ஆற்றலைக் கண்டதும், "இவ்வருட் குழவிக்குப் பாடம்

---

தெரிவையர்க ளாசை மிஞ்சி வெருகவிலை யாயு மூன்று
திரியுமடி யேனை யுன்ற னடிசேராய்.

சொல்ல நமக்கென்ன தகுதியிருக்கின்றது?" என்று நாணமும் திகைப்பும் ஒருங்கே எய்தி, அவருக்குப் பாடம் சொல்லுவதையே விட்டொழித்தார்.

தம்மிடமும் பாடம் படிப்பதில்லை, பெரும்புலவர் சபாபதி முதலியாரிடமும் பாடம் படிப்பதில்லை என்பது குறித்துச் சபாபதிப் பிள்ளை, தம் தம்பிமீது வெறுப்பும், சினமும் கொண்டு, "இனிமேல் இராமலிங்கத்திற்கு இங்கே உணவோ, உடையோ கிடையாது. அவனுக்கு இன்று முதல் நீ உணவு இடலாகாது" என்று தம் மனைவிக்குக் கண்டிப்பான கட்டளை இட்டுவிட்டார். இயல்பாகவே இரக்கமுடைய பெண் மனம், இக் கட்டளையை எவ்வாறு நிறைவேற்ற முடியும்? கணவர் சொல்லையும் தட்டுவதற்கில்லை. இரக்கத்தையும் அகற்றுவதற்கில்லை. அம்மையார் இருதலைக்கொள்ளி எறும்புபோல் தவித்தார். பின்பு, ஒருவகையாகத் தம் உள்ளத்தைத் தேற்றிக்கொண்டு தம்கணவனுர் இல்லாதபொழுது நோக்கி, நம் வள்ளற் பெருமானுர்க்கு, அவர் அண்ணியார் பாப்பாத்தியம்மையார், அன்போடும் இரக்கத்தோடும் கலந்து அமுதூட்டி வந்தார். இவ்வாறு பலநாட்கள் சென்றன.

சபாபதிப் பிள்ளையின் கல் நெஞ்சம் கனியவேயில்லை. தந்தையார் இராமைய பிள்ளையின் திதிநாளன்று உற்றூர், நண்பர், வறியர் அனைவரும் வயிறுபுடைக்கச் சபாபதிப் பிள்ளையோடு உடனிருந்து உண்டனர். அன்றுகூடச் சபாபதிப்பிள்ளை வள்ளற்பெருமான் உணவுகொள்ளலாம் என்று கருதவேயில்லை. பாப்பாத்தியம்மையார் நெஞ்சம் அன்று கரைந்து நீராய்விட்டது. வள்ளலார் உண்ட பிறகே தாம் உணவுகொள்ள வேண்டும் என்று அவர் கருதினர். ஆனால் வழக்கத்திற்கும் மாறாக, அன்று மாலை நான்கு மணிக்கே இராமலிங்கம் புழைக்கடைவழியாகச் சமயலறைக்குள் நுழைந்தார். கண் பூத்துப்போக அவர் வருகையை எதிர்பார்த்திருந்த பாப்பாத்தி அம்மையார், விரைந்து அவருக்கு உணவு படைத்தார். உணவு

---

மலசலசு வாச சஞ்ச லமதாலென்
மதிகலை கெடாமல் உன்றன் அருள்தாராய்.

மிகவும் ஆறிக் குழைந்துபோயிருந்தது. பெருமானார் வெறுப்புச் சிறிதும் கொள்ளாமல் முகமலர்ச்சியுடனேயே உணவை அருந்தினார். அம்மையார் கண்களிலிருந்து கண்ணீர் கலங்கிப் பெருக்கெடுத்து ஊற்றாய் ஒழுகிற்று. தேம்பி யழுதுகொண்டே, "தாங்கள், தங்கள் தமையனார்சொற்படியே கல்விபயிலுவதில் கருத்தைச் செலுத்தினால், இத்தகைய துன்பத்தை நான் கண்டு கலங்க நேரா திருக்குமே" என்று அங்கலாய்த்து அண்ணியார் கூறிய கலக்க உரை, வள்ளலாரையும் கலக்கிக் கண்ணீர் வடிக்கச் செய்துவிட்டது. "இனியாவது தாங்கள் கல்வி பயிலுவதில் கருத்தைச் செலுத்தவேண்டும்" என்று அண்ணியார் அண்ணலாரை வேண்டினார். அடிகளாரும், இனித் தாம் ஒழுங்காகக் கல்வி பயிலுவதாகவும், தமக்கு ஓர் அறை தனியாகத் தரவேண்டு மென்றும் அண்ணியாரிடம் கூறி வேண்டினார். அண்ணியார் உள்ளம் பூரித்தது.

மறுநாள், பாப்பாத்தியம்மையார், தம்கணவனாரிடம் நிகழ்ந்தன யாவும் கூறி, மேல்மாடியில் இருந்த அறை யொன்றினைப் பெருமானார்க்கு என ஒழித்துக் கொடுத்தார். வள்ளற் பெருமானார் அவ்வறையைத் தக்கதெனத் தேர்ந்து, சில பொருள்களை வாங்கிக் கொண்டு அதற்குள் குடிபுகுந்தார்.

பெரிய கண்ணாடி ஒன்றினைச் சுவரில் வள்ளலார் மாட்டினார்; அதற்கு நேராக ஒரு விளக்கை ஏற்றி அதன் ஒளி கண்ணாடியில் எதிர் தோற்றுமாறு பொருத்தினார்; கண்ணாடியை மலர்மாலை கொண்டு அணிசெய்தார்; கருப்பூரம் ஏற்றி அவ்வொளி எதிரில் காட்டி அதையே முருகன் அருவுருவாக மதித்து வழிபட்டார்; அறை முழுதும் நறுமணம் வீசுமாறு சாம்பிராணி முதலியவற்றின் புகையூட்டினார்; பின்னர்க் கண்ணாடியில் தோன்றும் சுடரையே இமை கொட்டாமல் உற்று நோக்கியவண்ணம் முருகப்பெருமானைச் சிந்தித்தார். சிறிது நேரத்திற்குள் அவ்வொளியூடே ஆறு முகமும், கடப்ப மாலையணிந்த பன்னிரு தோள்களும், தாம

---

அகிலபுவனாதி யெங்கும் வெளியுற மெய்ஞ்ஞான இன்ப
அமுதையொழி யாதருந்த அருள்வாயே.

ரைத் தாள்களும், வேலும், கோழிக் கொடியும் கொண்டு மயில் வூர்தியின் மீது தணிகை முருகன் அவருக்குக் காட்சி அளித்தார். அவ்வுருவைக்கண்டதும், பாமாலைகள் பலப் பலவாகத்தொகுத்துப் பாடிப் பெருமானார் முருகனைப் பரவினார். இசைப்பாடல்கள் பாப் பாத்தியம்மையாரை மாடிக்கு வலித்தன. விரைந்தோடிச் சென்று அண்ணலார் கண்மூடிப் பாடிக் கசிந்துருகும் நிலையைப் பலகணி வழியாக உற்று நோக்கிப் பாப்பாத்தியம்மையார் தம்மை மறந்து நெடுநேரம் நின்று, பின் தெளிந்து, எல்லையில்லாத மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார். பிள்ளைப் பெருமானாருடைய ஒன்பதாம் ஆண்டில் இந்த நிகழ்ச்சி நிகழ்ந்தது.

சபாபதிப்பிள்ளை, சென்னை முத்தியாலுப்பேட்டையில், சோமு செட்டியார்வீட்டில், வாரந்தோறும் ஒருநாள், பெரியபுராணச் சொற்பொழிவு ஆற்றிவந்தார். செட்டியார் பொன்னால் அமைக்கப்பட்ட கூத்தப்பிரான் படமொன்று வாங்கிவந்தார். அதனைத் திறந்து வைக்க ஒருநாள் குறிக்கப்பெற்றது. அன்று, திருஞான சம்பந்தர் வரலாறு தொடங்கவேண்டும் என்று செட்டியார் சபாபதிப்பிள்ளையவர்களை வேண்டிக்கொண்டார். குறித்த நாள் வந்தது. சிறப்பான ஏற்பாடுகளைச் செட்டியார் செய்துவைத்துச் சபாபதிப் பிள்ளையவர்கள் வருகையை எதிர்நோக்கியிருந்தார். ஆனால் அன்று திடீரெனத் தலைவலியும் காய்ச்சலும் தோன்றிச் சபாபதிப் பிள்ளையைப் படுக்கையை விட்டு எழாவாறு செய்துவிட்டன. செட்டியார் சினத்திற்கு ஆளாகவேண்டி வருமே எனச் சபாபதிப் பிள்ளை பெருங் கலக்கம் கொண்டு, தம் மனைவியிடம் இன்னது செய்வதென்று தோன்றவில்லையே என முறையிட்டார். அது கேட்ட கற்பிற்கரசியார், 'இதோ வருகிறேன்' என்று சொல்லிவிட்டு, மாடிக்கு ஓடி, அண்ணலாரைப் பார்த்துச் செட்டியாரவர்கட்குச் சினமுண்டாகாதவாறு அவர் இல்லத்திற்குச் சென்று தம் தமையனார் நிலையை உணர்த்திப்பின் இரண்டொரு பாடல்களைப்படித்துப்

---

அதிர வரற்று கோழியும் அடியர் வழுத்தி வாழ்வுறும்
அபிநவ பத்ம பாதமு மறவேனே.

புராணத்தையும் தொடங்கிவைத்துவிட்டு வருமாறு வேண்டினர். அவரும் தடையொன்றும் கூருமல் ஒப்புக்கொண்டார். அவருடைய உடன்பாடு பெற்ற அம்மையார் தம் கணவரை யடைந்து, தம்பியார், அவருக்கு வருத்த மேற்படாதவாறு செட்டியார் வீட்டிற்குச் சென்று ஆவனசெய்ய ஒப்புக்கொண்டு விட்டார் என்று அவரைத் தேற்றினர். பின்னர்ச் சபாபதிப்பிள்ளையே தம் தம்பியாரை அழைத்து, "அப்பா, நீ சென்று இரண்டொரு பாடல்களைப் பாடி புத்துருத் தாங்கி நிற்கும் கூத்தப பெருமானுக்கு நீ ஆராதனை செய்துவிட்டுச் செட்டியாரிடம் மன்னிப்புக் கேட்டுவா" என்று கூறி அவரை யனுப்பினர். தம்பியார் சென்றார்.

செய்தி தெரிந்த செட்டியார், "ஏற்பாடு அடியோடு முறிந்து போகாமல் இதுவாவது நடைபெறுமாறு இறைவன அருள் செய்தாரே" என்று திருவருளை வாழ்த்திக்கொண்டே வள்ளற் பெருமானிடம் புராணத்திலிருந்து இரண்டொரு பாடல்களைப்படிக்குமாறு சொன்னார். பிள்ளைப் பெருமான் ஒரு பாட்டைப் படித்துப் பின் சொற்பொழிவு ஆற்றப் புகுந்துவிட்டார். நாள்தோறும் இரவு ஒன்பது மணிக்குச் சொற்பொழிவு முடிவு பெறும். இரவு பன்னிரண்டும் ஆயிற்று. இரண்டு வரிகள் கூட முழுதும் முடிவு பெறவில்லை. எவர்க்கும் மணி போனதே தெரியவில்லை, முக்கனியும் பிழிந்து வடித்தெடுத்த சாற்றில், சருக்கரையும் கற்கண்டின் பொடியும் கலந்து, இனித்த நெய் அளைந்து இளஞ் சூட்டில் இறக்கி முந்திரி, வாதுமை முதலிய பருப்பு வகைகள் தூள் செய்து தூவிப் பக்குவஞ் செய்த பாகினும் மிக்க இனிமையாக இருந்தது அருளாளர் வாயிலிருந்து வெளிவந்த ஒவ்வொரு சொல்லும் என்றால் அது மிகையே ஆகாது என்னலாம். ஏன்? அவர் குரலோசையைக் கேட்டவுடன் வழக்கமாகச் சொற்பொழிவிற்கு வாராதவர்கள் கூட வந்து குழுமினர். முடிவில் அவரே புராணம் முழுமையும் படித்துச் சொற்பொழிவு ஆற்றுதல் வேண்

---

பிழையே பொறுத்தன் இருதாளி லுற்ற
பெரு வாழ்வு பற்ற அருள்வாயே.

டும், எனச் செட்டியாரவர்கள் வள்ளற் பெருமானை வேண்டிக் கொண்டதோடு, சபாபதிப்பிள்ளை யவர்களும் அதற்கு இசைய வேண்டுமென அவரிடமும் சென்று மன்றாடினர். இது கேட்ட சபாபதிப்பிள்ளை யவர்கள் இசைந்தாரெனினும், "ஈதென்ன புதுமை யாக இருக்கிறதே!" என்று ஐயங்கொண்டு, பின்பொரு நாள் தம் தம்பியார் சொற்பொழி வாற்றுதலை மறைவிலிருந்து கேட்டுத் தம் புலமை அவர் புலமையில் ஆயிரத்தில் ஒரு கூறு கூட ஆகாதே என்றுகண்டு, வியப்பும், திகைப்பும் அடைந்து, தாம் அவரை அது வரையில் தவறாக எண்ணியது பற்றிப் பெரிதும் நாணி, அன்று முதல் அவரைத் தம் தம்பியார் என எண்ணாமல், தம்மை ஆளவந்த தெய்வமெனவே மதித்து அவரிடம் பயபக்தி, விசுவாசம் காட்டி ஒழுகத் தலைப்பட்டார்-

(தொடரும்)

# திட பக்தி

*என். எஸ். இராமச்சந்திர ஐயர்-ஸ்கந்த நிகேதனம்.*

மனதை ஒரே பொருள் வஸ்துவில் நிலைகொளச் செய்வது எளிய செயலன்று. ஆயினும் அதற்காக நாம் நிதம் அப்பியாசம் செய்துவரவேண்டும். அப்பியாசத்தால் நாளடைவில் எக்காரியத்தையும் சுலபமாகச்சாதித்து விடலாம். மனோலயத்திற்கான சாதனைகளை முறைப்படி அநுதினம் நாம் அப்பியசிக்க ஆர்வம் கொள்ளாமையால், ஐம் பொறி வாயிலாக நம் மனச்சக்தி அனவரதமும் வெளியே போய்க்கொண்டே யிருக்கிறது. இதனால் நமக்குளவாகும் நஷ்டத்தைப்பற்றி நாம் அக்கறைகொள்வதில்லை. வீணிலே காலம் கடத்துகிறோம். நமது ஆற்றலும் தினே தினே குன்றி வருகின்றது. வாழ்க்கையின் நோக்கம், அதாவது, தன்னுளே தங்கும் தெய்வீக சக்தியை உன்னி உணர்தல் நிறைவேறாமற் போகின்றது.

---

படாமலடி யேனுஞ் சுவாமியடி தேடும்
அநாதி மொழி ஞானந் தருவாயே.

உலகினில் பல கலைகளைக் கற்றுணர்ந்தும், மேலாம் கருத்துக்களைப் பிறர்பாற் கேட்டறிந்தும், அரிய பெரிய சொற்பொழிவுகளை ஆற்றியும், நான்குவிதக் கவிகளைப் பாடியும், நூற்களுக்கு விரிவான உரைகளை ஆக்கியும் அடையும் பேறு என்ன? "இவர் மகா மேதாவி, பெரிய வித்துவான், அருமையான சொற்பொழிவாளன்" என்ற இன்னோரன்ன புகழுரைகளைப் பெறலாமே யொழிய ஆன்மலாபம் ஒன்றும் பெற முடியாது. இப்புகழ் நமக்கு மேலாங்கதியை அளிக்கவல்லதோ? அநுபூதி ஞானத்தை அளிக்குமோ? ஸோஹம் நிலையினைச் சேர்க்குமோ? கலைகளால் கைவல்லிய பதம் காணார். குஹாநுபூதிச் செல்வராகிய திருப்போரூர் சிதம்பர ஸ்வாமிகள் என்ன கூறுகிறார் என்று பார்ப்போம்.

"மலைமுழையி லுற்றுலென் மாமருந்துண் டாலென்
கலைமுழுதுங் கற்றுலென் காணார்—இலைநிலவு
வேல்பிடித்த கையான் வியன்போரு ரையனிரு
கால்பிடித்தார் காண்பார் கதி"

கந்தாநுபூதி 67-ஆவ்து பாட்டின்கண் அமைந்துள்ள கருத்தினையும் கவனிப்போம்,

"கலைகற் றினுமென் கவிபா டினுமென்
நிலைகற் றினுமென் நினைவந் துணராக்
கொலைகற் றிடுவோர் கொடுவஞ் சகமா
மலைகட் டறவென் றருள்வாய் குகனே."

ஆகையினால் ஆத்மாநுபூதியை அடைவதற்கு நாம் பாடுபடவேண்டும். அநுபூதியே நமது குறிக்கோளாக வேண்டும். நிட்டையின்றி அநுபூதி அடைதல் எங்ஙன்? நிட்டை கைகூட வேண்டுமாயின் அநுதினமும் நாம் ஆண்டவன் திருவடியை புருவமையத்துள்ள ஆக்ஞா சக்கரத்

---

முடியாது பொற் சதங்கை தருகீத வெட்சிதன்று
முதிராத நற்பதங்கள் தருவாயே.

தின்கண் நிறுத்திப் பழகவேண்டும். ஆண்டவன் ஆக்ஞை கள் பிறக்குமிட மாகையினால் இந்த ஆக்ஞா சக் கரமே தாரணைக்கு ஏற்ற இடமாகும். இதனைச் சோர் வடையாமற் செய்துவர வேண்டும். இதுவே சிறந்த வழி. ஸ்ரீபகவத் பாதாள் பக்தியின் இலக்கணத்தைப் பின் வரு வாறு விளக்குகிறார் :

"தருவை யங்கோல விதைகளுங் காந்தந்
 தனையிரும் பூசியும் பதியைத்
தெரிவையும் மரத்தைக் கொடிகளுங் கடலைத்
 தெள்ளிய நதிகளுஞ் சேரு
மொருமுறைப் படியே மனநினை வதுவு
 மொருசிவன் மலரடி யிணையை
மருவியெந் நாளு மன்னிநிற் பதுவே
 வரமிகு பத்தியன் பென்பர்."

மனோவிருத்தியானது ஈசன்பாற் சென்று அவன் பதமல ரிலேயே ஸதா தங்கி நிற்றலைத்தான் பக்தியென்று கூறு கின்றார். ஒருவனது உட்கரணம் எப்போதும் ஈசன் பாத மலரயிலே ஊன்றியிருக்குமாயின் அதுவே மாபெரும் யோகம், சிறந்த திடபக்தி, அளவிலா அன்பு, பேரா னந்தம்.

என்னென்ன துன்பங்கள் நேர்ந்தாலும்,பெருங் கவலை கட்குட்பட்டாலும் இறைவனின் அடியிணையை மறத்தல் கூடாது. மனச் சோர்வுற்று மதிமயங்கக்கூடாது. பழக் கத்தில் வைத்திருக்கும் சாதனைகளை கைநழுவ விடவே கூடாது

"கவலை மனத்த னாகிலும் உனது ப்ரஸித்த மாகிய
 கனதன மொத்த மேனியு முகமாறும்
............ ...... ...... ...... ...... ......

---

சிவாய மெனுநாம மொருகாலு நினையாததி
 மிராகரனை வாவென் றருள்வாயே. -

*அதிர வாற்று கோழியும் அடியர் வழுத்திவாழ்வுறும்*
*அபிநவ பத்ம பாதமு மறவேனே"[5]*

என்றல்லவா ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் பாடியுள்ளார். அவரது வேண்டுகோளாகிய

*"இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்*
*இளமையுமு னழகுபுனை யீராறு தோள்நிரையும்*
*இருபதமும் அறுமுகமும் யானோத ஞானமதை யருள்வாயே"[6]*

எனும் அரிய பிரார்த்தனையை நாமும் எடுத்து ஸதா ஓதுவோமாக!

சிலபேர்கள் கைம்மாறு கருதியே கடவுளை வழிபடுவர். அவர்களுடைய வேண்டுகோள்களுக்குப் பலன் ஏற்படாவிட்டால் கடவுளேது என்று நாத்திகம் பேசவும் துணிந்துவிடுவர். இதெல்லாம் திடசித்தம் இன்மையாற்றான். கடவுள் பக்திக்கும் உலகாயத இன்பங்களுக்கும் பந்த மேற்படுத்திக்கொண்டு பக்தி மார்க்கத்தில் பிரயாணம் செய்ய ஆரம்பிக்கும் பக்ஷத்தில் லக்ஷிய ஸ்தானத்தையடைவது முடியாமற்போய்விடும். அது உண்மை பக்தியும் ஆகாது. வியாபாரிகளின் ஒப்பந்த சாசனங்களுக்குச் சமானமாகச் சொல்லலாம்.

"பக்தி என்றால் உனக்கு நேர்ந்ததையெல்லாம் மகிழ்ச்சியுடன் ஒப்புக்கொள்ளவேண்டும். தெய்வம் அமைத்த அமைப்பைச் சந்தோஷத்துடன் ஒப்புக்கொள்வதுதான் உண்மையான பக்தி" என்று மேல்நாட்டு ஞானியாராகிய மார்க்கஸ் அரேலியஸ் கூறியுள்ளார். என்னே இக்கருத்தின் மேன்மை! உண்மை அநுபூதிமான்களைத் தவிர ஏனையோருக்கு இப்பேர்ப்பட்ட அருமை மொழிகளை இயம்ப இயலுமோ? ஔவையாரின் பாட்டினையும் நோக்குவாம்:

---

*[5] நிரோதமல மாறு மடியார்களரு மாதவர்*
*தியானமுறு பாதந் தருவாயே.*

*"ஒன்றை நினைக்கின் அதுவொழிந்திட் டொன்றாகும்*
*அன்றி யதுவரினும் வந்தெய்தும் - ஒன்றை*
*நினையாத முன்வந்து நிற்பினும் நிற்கும்*
*எனையாளும் ஈசன் செயல்."*

**இரு வினைகளுக் கேற்ப மக்களுக்கு இன்ப துன்பங்களை ஊட்டும் கடவுளின் கருணையை விளக்கி மக்களுக்கு மன வுறுதியை இப்பாட்டினால் வளர்த்துகிறார். இதனை நன்கு மனதில் பதியவைத்து ஈசனை வழுத்துவோமாக !**

சுபம். சுபம். சுபம்.

# கந்தரநுபூதி

(குழந்தைங்கவேலுத் தேவர்—அம்பாரம் பாளையம்—புள்ளாச்சி)

*கந்தரால் உபதேசிக்கப்பட்ட சுவானுபவத்தைச் சொல்கின்ற நூல் என விரியும். அநுபூதி யெனவே, ஒப்புயர்வில்லாத ஒரு பெரும்பொருளை ஆராயுங்கால் விளங்கும் உண்மைகளை ஆன்ம குருநாதன் அருளைப்பெற்று உலோ கோபகாரமாகச் செய்யுள் வடிவாக இயற்றியதால், உண்மையான சுவானுபவம் நிறைந்த தவசீலர்களே மெய்ப் பொருள்கண்டு பிறவிப்பயன் பெறுவர். என்போன்ற மற்றையோர் மெய்ப்பொருள் காணும் சுவானுபூதியை விடுத்து இந்நூலுக்கு உலக வழக்கு, செய்யுள் வழக்கு என வழக்குகளும், இலக்கிய இலக்கணம் முதலிய ஆதாரங் களும் தேடிக் கொண்டு, இந்நூல் மந்திரமா, தந்திரமா, பிர யோகமா என மருள் கொண்டு, அறம் பொருளின்பம் வீடடைதல் நூற்பயனே என்றபடி அநுபூதியின் பிரயோ ஜனமான உண்மையானந்தம் அடையாது அல்லலுறுவர்.*

---

*ஓமெழுத்திலன்பு மிகவூறி*
*ஒவியத்திலந்தம் அருள்வாயே.*

ஆதலால் அநுபூதியின் ஆனந்த நிலைக்குச் செல்ல புத்தக வழி, மத்தக வழி என்ற வழிகளுள் அன்பர்களை மத்தக வழியாகிய அநுபவத்திற் செலுத்துவான் வேண்டியே இவ்வுரை எழுதப் புகுந்தமையால், இதனைக் கண்ணுறும் மேலோர்கள் அடியேனது அறியாமைக்கு இரங்கிக் குற்றங்களை நீக்கி குணத்தைக் கொள்ளுமாறு வேண்டுகின்றனன்.

## நூல்

## குரு துதி

தஞ்சத்து-ஜீவகோடிகளது அறியாமைக்கு இரங்கி; நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக—ஆணவம், கன்மம், மாயை என்ற களிம்புகளாற் சூழ்ந்து இளகாத தன்மையுடன் கூடிய வன்னெஞ்சாகிய பெரிய கல்லும் தனது பெருங்கருணை யென்னும் ஞானாக்கினியால் அன்புக் குழம்பாக உருகுவதற்கு (பதம்-ஐ) அருள்-சிறந்த பக்குவமாக உபதேசம் அருள் செய்தவனும்; இயல்சேர் செஞ்சொற் புனைமாலை சிறந்திடவே-சுவானுபூதியே இயற்கையாகவுள்ள செவ்விதான மொழிகளென்னும் மலர்களால் அலங்கரித்த அநுபூதியென்னும் செய்யுள் மாலையானது பிறவிப் பெருங் கடலிலகப்பட்டுக் கரை காணாது தவிக்கும் பாமரர்கட்கும், அன்பென்னுங் கரை காட்டித் துக்க நிவர்த்தி தந்தருள்வதில் இவ்வநுபூதியே சிறந்து விளங்கவும் (பதம்-அருள்) உண்மையான நிலையை அருள் செய்தவனும்; பஞ்சக்கரவான்-அகர, உகர, மகர, விந்து நாதம் ஆகிய பஞ்சாக்கரங்களுக்கு மூலகாரணமான ஒப்பற்ற தனிவெளியாகிய பதத்தை அருள் செய்தவனும்; (ஆகிய)

---

இடைவிடா தெடுத்த பிறவி வேரறுத்து
உன் இனியதாள் அளிப்பது ஒருநாளே.

சண்முகனுக்கு-(ஆருதாரங்களின் அதிதான தேவதைகளா யுள்ளவனும், அடியேனைத் தடுத்தாட் கொண்ட ஞான தேசிகனுமான) அறுமுகப் பெருமானுக்கு; பணிவு ஆம்-(நமது) வணக்கத்தைச் செலுத்துவாம்-எ-று.

(தாத்பர்யம்) இவ்வநுபூதியானது பிற நூல்களைப் போல் அல்லாது அருணகிரிப் பெருந்தகையார் தமது குரு நாதராகிய முருகப் பிரானால் உபதேசிக்கப்பட்ட மெய்ப் பொருட் பயனை அடைதற்கு ஆராய்ந்து செல்லுங்கால், அஞ்ஞான வழியில் வருங்கொள்ளைக் கூட்டத்தாராகிய உட்பகைவர்களை அணுகவிடாது தடுத்தற்குத் துணையா யது, குருபதேசமாகிய தீபவொளியே ஆதலால், குருநாத னுக்கே முதலில் வணக்கம் கூறினர்.

நூல் சொல்லப் புகுவார் உலக நடையில் ஏற்புடைக் கடவுள், வழிபடு கடவுள் என்று வணங்குவது இயற்கை யாயினும் தான் சுவாநுபூதி சொல்வதற்கே காரணம் குரு நாதன் அருளாதலாலும், தனது உடல், பொருள், ஆவி மூன்றும் குருநாதனுக்கே அடிமையாதலாலும், அடிமை செய்யும் தொண்டு ஆண்டைக்கே உரிமையாவதாலும், தான் கூறும் வணக்கம் குருநாதனுக்கே என்பார். பணிவு சண்முகனுக்கு ஆம் என்று கூறினர் என்க.

தனது சுவானுபவமாவது உலக மயக்கில் கட்டுண்டு வாழ்க்கையை வெறுத்து கோபுரத்தின் மேலேறி வீழுங் காலத்து சண்முகப் பெருமான் பெருங் கருணையால் தானாக வந்து தடுத்தாட் கொண்டான் என்பதை விளக்க தஞ்சத்து பதமருள் சண்முகனென்முர். உபதேச உண்மை யால் கடினமாகிய மனமென்னும் பெரிய கல்லையும் அன்புக்

---

அவசமாகி யுருகு தொண்டருடன தாகிவிளையுமன்பி
னடிமையாகு முறைமை யொன்றை அருள்வாயே.

குழம்பாக உருக்கியவிடத்து உண்டாகும் ஆனந்த நிலையை பிறருக்கு அறிவுறுத்தல் இயலாது. ஆதலால் வாயினால் சொல்லிவிக்க முடியாத அநுபூதி நிலையைப் பாமரரும் அறிந்துய்யுமாறு தமிழ் மாலையாக வெளிவந்தமைக்கு அறுமுகவன் அருளே காரணமென்பார். இயல்சேர் சொற்புனை மாலை சிறந்திடவே பதமருள் சண்முக னென்றார்.

ஜீவகோடிகளை உய்விப்பான் றோன்றிய தவசீலர்க்கே ஞானாசிரியன் சாருகவந்து அருள்தருவனேயலது மற்றையோர்க்கு வாய்ப்பதரிது. ஆகையால் தவசீலரல்லாத ஏனையோரும் உய்வான் வேண்டி சண்முகப் பெருமான் உலோகோபதேசமாகத் தன்னால் உபதேச இரகசியமாகிய கந்தரநுபூதி யென்னும் நூலைத் தோற்றுவித்து அநுபூதியால் கன்னெஞ்சுருகி அன்பொழுக்கு ஆகவும் அதன் பிரயோஜனமான பஞ்சாக்ஷர நிலைக்கே மூலகாரணமாகவுள்ள பரவெளி எய்தவும் அருள் செய்தமை தோன்ற நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருகவும், பஞ்சக்கரவானையும் எய்துவிக்கப் பதமருள் இயல்சேர் செஞ்சொற் புனைமாலை யென்றார்.

எந்த உபதேசமும் ஞானசாரியன் தரிசன மில்லாது இக்கந்தரநுபூதிபோல் பலன் தராது என்பதை விளக்க முதலில் நெஞ்சக் கனகல்லு நெகிழ்ந்துருக என்றும் கடையில் பஞ்சக்கரவான் பதம் என்றும் இடையில் நடுநிலைத் தீபம்போல் இயல்சேர் செஞ்சொற்புனைமாலை சிறந்திடவே என்று சிறப்பும் தேற்றே காரமும் கொடுத்தோதினார் என்க. இதுவும் சண்முகன் அருள் என்பார். பதமருள் சண்முகன் என்றார்.

அருணகிரிப் பெருங்குரவரின் உபதேசமாகிய கந்தரநுபூதி யென்னும் அருள் மொழியானது தொன்றுதொட்டு

---

சடமழிதலானதின்பின் மூடனென வோதமுன் புன்
சர அருள் கூர வந்த எனையாள்வாய்.

வந்த சகல உபதேசங்களினும் சிறந்தது என்பதனை ஆராய்ந் தனுபவித்த தாயுமான சுவாமிகள், "கந்தரநுபூதி பெற்றுக் கந்தரநுபூதி சொன்ன எந்தையிணை யடிகள் எற்று நாள் என்னுளோ" என்றும்

"ஐயா, அருணகிரி யப்பா வுனைப்போல
மெய்யாக வோர்சொல் விளம்பினரார்"—என்றும்

சொல்லிப் போந்தமை போதிய சான்றாகும்.

அல்லாமலும், சுவானுபவ நிலையே குறியாகவுள்ள ஆன்றோர்கள், அய்யா, அருணகிரியப்பா என்ற வார்த்தை யைப் பன்முறையோதி யுணர்ந்தால் அநுபூதியே தலை சிறந்த உபதேசமென்பது ஒவ்வொருவருக்கும் ஐயமின்றி விளங்கும்.

இந்த குரு வணக்க அநுபூதியால் ஞானசிரியனுப தேசம், சிருஷ்டி, திதி, சங்காரம் ஆகிய முத்தொழில்களும் செய்ய வல்லது என்பதனை அன்பை உண்டாக்கி, அநுபூதி யைக் காத்து, அல்லலைச் சங்கரித்தமையே போதிய சான்று. இன்னும் இதன் மாட்சி விரிக்கிற் பெருகும்.

இவ்வநுபூதியால் உண்டாகும் இகபர நன்மைகள் எண்ணிறந்தன என்பது அந்தர்முக விசாரணையால் இனிது விளங்கும். அருணகிரிப் பெருந்தகைக்கு ஞானசிரியனும், உபதேசித்த வஸ்து நிச்சயமும் கந்தரலங்காரம்

"ஒளியில் விளைந்த வுயர்ஞான பூதரத் துச்சியின்மேல்
அளியில் விளைந்ததோ ரானந்தத் தேனை யநாதியிலே
வெளியில் விளைந்த வெறும் பாழைப்பெற்ற வெறுந்தனியைத்
தெளிய விளம்பிய வாமுக மாறுடைத் தேசிகனே"

என்பதால் விளங்கும்.

---

இருவரு முருகிக்காய் நிலையென மருவித்தேவ
ரீளையவனென வித்தார மருள்வாயே.

கட்டுரை

# 'மயிலேறிய மழவன்'

(திருப்புகழ் சதுரர் சே. த. இராமலிங்கம் பிள்ளை B. A., B. T.
சென்னை)

மாலை நேரம். வீதிகளில் பெண்கள் பெருக்கித் தண்ணீர் தெளித்து மேதகு கோலங்களிட்டுக் கொண்டிருந்தனர். பகல் முழுதும் வேலை செய்துவிட்டு ஓய்வு நாடித் தொழிலாளிகள் வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றனர். தெருக்கோடியில் மாடி வீட்டெதிரில் சிறுமியர் சிலர் கைகோத்து ஆடலும் பாடலும் நிகழ்த்தினர். அவர்கள் நடுவில் நிற்கிருள் நாகு.

நாகு அங்குள்ள மாடி வீட்டுத் தனவந்தரின் அருமந்த புதல்வி. பத்து அல்லது பதினொரு வயது இருக்கும். அவளது மாந்தளிர்மேனியும், களங்கமற்ற முகமும், உயர்ந்த ஒழுக்கமுஞ் சீலமும் கண்டோரைக் களிக்கச் செய்யும். இவளது தெய்வ பக்தியும் அடியவர் பால் அன்பும் போற்றற்குரியவை.

மற்றப் பெண்களுடன் ஆடிக் கொண்டிருந்த நாகு திடீரென ஆடலை நிறுத்திஞள். அவள் கண்ணுங் கருத்தும் நெடுந் தொலைவில் வந்து கொண்டிருந்த திருக் கூட்டத்தவர் மேற் சென்றது. இதனைக் கண்ட ஏனைய பெண்களும் ஆடலை நிறுத்தினர்.

அடியார்கூட்டம் மெல்ல மெல்ல அருகில் வந்து கொண்டிருந்தது. அதன் இடையில் செம்மேனி அண்ணல் ஒருவன் காணப்பட்டான். பொன்மேனியிற் பொலிந்த புனித நீறும் கரத்திலமர் வேலும் கந்தப் பரமனின் திருவுருவத்தைச் சிந்திக்கச் செய்தது.

---

அமிர்தகவித் தொடைபாட
அடிமைதனக் கருள்வாயே.

நாகு, கொஞ்ச நேரம் அவனையே கூர்ந்து நோக்கிய வண்ணம் இருந்தாள். அண்ணல் தானும் புன்முறுவல் பூத்த முகத்துடன் பூவையை நோக்கினுன். பிறகு நாகு தன் தோழியர் கூட்டத்தை விடுத்து அண்ணலிடம் விரைந்தோடி அவனது மலரடிகளில் விழுந்துவணங்கினுள். அவளது மனம் எதனையோ நாடியது. அவளது உள்ளக் காதலை தெள்ளத் தெளிவிப்பனபோல் கண்கள் துடித்தன. வாய் மாத்திரம் எதையும் பேசவில்லை. வாய்ச் சொற்கள். என்ன பயனுமிலவாயின.

கூட்டத்தில் நின்ற குமரன் குமரியை நோக்கி ஏதோ சொன்னுன்; என்னமோ ஈந்தான்.

அப்போது மலர்ந்தது வதனம்; மதர்த்தன விழிகள்; மறைந்தனன் அண்ணல்.

குமரன் மறைந்ததும், குமரியின் பார்வை ஏனைய தோழிகள்மேல் வீழ்ந்தது. ஆனுல் நாகு ஏதேனும் சொல் லுவாளென்று எதிர் நோக்கிய அவர்கள் ஏமாற்றமே அடைந்தனர். நாகு வீதியினின்றும் ஓடி வீட்டிற்குள் புகுந்தாள். மகளைக் காணுது தேடிக் கொண்டிருந்த அன்னை எதிரிற் சென்று நின்றுள்.

செல்வ மகளைக் கண்ட தாய் "நாகு! இந்நேரம் எங் கிருந்தாய்! எத்தனை முறை கூப்பிட்டேன்! ஏன் பதில் கூற வில்லை" என்று பன்முறை கேட்டாள். ஆனுல் நாகு பதி லொன்றும் கூறுமல் வாக்கு மவுனஞ் சாதித்தாள். குழந் தைக்கு என்ன நேர்ந்ததோ! என்றையுற்ற தாய் மகளை உற்று நோக்கினுள். ஆ! என்ன விந்தை! அவள் கண்ட காட்சி அற்புதம்! அற்புதம்!

நாகின் நெற்றியில் தூவெண்ணீறு துலங்கியது; நாக்கு எதையோ செபிக்கிறது; கழுத்தில் இருந்த தங்கச்

---

திருமகள்மருவிய திரள்புய அறுமுக
தெரிசனை பெற அருள் புரிவாயே.

சங்கிலியிடையில் மங்கலவேல் ஒன்று வயங்குகிறது. கண்டதாய்க்குக் கவலையே மிகுந்தது; அவள் மகளின் கழுத்தைக் கூர்ந்து நோக்கி 'இது எப்படி வந்தது' என்று வேலைச் சுட்டிக்காட்டிக் கேட்டாள். உடனே நாகு நடந்த தைக் கூறினாள்.

தாயின் துயரம் மிகுதிப்பட்டது. "அபலையே! உன்னை எவனோ மாயத்தூள் போட்டு மயக்கி திருட்டுத்தாலி கட் டிப்போனான்; அதை இப்போதே அகற்றிவிடு. மணமாக வேண்டிய உனக்கு இது மாபெரும் பழியை உண்டாக் கும்" என்று அலறினாள். நாகு, தாயின் தாலியைக் காட்டி அதைப் போலவே தன் கழுத்திலுள்ள வேலுமாகும். ஆத லால் அதைக் கழற்ற முடியாது என்றும் கூறிவிட்டாள். அதை அகற்ற தாய் செய்த முயற்சியனைத்தும் பயனில தாயிற்று. இது நெடுநாள் தந்தைக்குத் தெரியாது. ஒரு நாள் அவனுக்கு இது தெரிய வந்தது. உடனே அவன் கோபங் கொண்டு 'இன்று இரவு, எப்படியாவது அதை அகற்றிவிடுவேன்" என்று உறுதி கொண்டான்.

இதனை அறிந்த நாகுவின் மனம் வருந்தியது. "இது பெரும் பாவம்" என்று அவளுக்குப் பட்டது. ஆயினும் தந்தையின் முடிவான எண்ணத்தை அறிந்ததும் நாகு வுக்கு எங்ஙனமேனும் தன் கழுத்தில் அவ் வேலை அணி வித்த அண்ணலிடம் அதைச் சேர்ப்பித்தல் நலம் எனத் தோன்றியது. உடனே நாகு தன் மேலிருந்த அணியாதி களைக் களைந்து நீறுங்கண்டிகையும் புனைந்து வேலளித்த பாலனை நாடிப் புறப்பட்டாள். ஓடுகிறாள்! யாரையும் கவனிக்கவில்லை. அண்ணல் எங்குற்றான்? எங்குற்றான்! என்று அங்கலாய்த்தது அவள் மனம்.

கண்ணில் அண்ணல் உருவத்தையன்றி வேறொன்றும்

---

பூண்டடி யேனெறியில் மாண்டிலனே நாகில்
வீழ்ந்தலை யாமலருள் புரிவாயே.

படவில்லை. காது எதையும் கேட்டிலது வாய் அவனையே கூவியது. இவளைக் கண்டோர் பித்தேறி விட்டதோ என்றும் பேசலாயினர்.

ஆறு நாளளவும் உணவை விடுத்தாள். உறக்கம்ஒழித்தாள். உரியவனை நினைத்தாள். ஓடினாள்; அலைந்தாள்; பயனில்லை. கால்கள் சோர்ந்தன. கண்கள் சுழன்றன. வீழ்ந்தாள் ஓர் மணல் திட்டின்மேல். கண்கள் மூடின.

கண்ணெதிரில் பொன் மயில் ஒன்று தோகை விரித்து நின்றது. தலையசைத்து நாகை நோக்கி 'என்ன வேண்டும்' என்றது.

நாகு, சொல்லறிய சின்மயனும் சொல்லவுள்ள பூரணமாம், வல்லவனை நான் கூடி வாழ்வேனோ? பொன் மயிலே! (இளம்பூரண ஞானமய இறைவனைக் கூடி நான் வாழ்வேனோ?)

மயில் : அவன் யார்? அவன் பெயர், ஊர், பிறப்பு, பிரியமானவர், பெற்றோர், சகோதரர் மனை முதலிய தெரியுமா?

நாகு : தெரியாதே! 'பேரூர் பிறப்பு நடை பெற்றோர் பிறந்தாரும், தாரமுமில் வாதவனைச் சார்வேனோ பொன் மயிலே?'

மயில் : அவரை எப்படி அறிவது?

நாகு : அவர் அயிலேந்திய அழகன். வேலேந்திய வேந்தன். அவரை எங்ஙனமேனும் கொணர்ந்து காட்டு. உன் காலையேனும் பிடித்துக் கொள்கிறேன்.

மயில் : அழகன் என்றால் அவரை ஒரு சித்திரத்திலேனும் எழுதி யிருந்தால் எளிதில் அறியலாமே.

---

செறிவுற் றிணையிற் றயிலுற் றருமைத்
தெரிவைக் குணர்வைத் தரவேணும்.

நாகு: சித்திரத்திலும் பொறிக்க ஒண்ணுத் திருவழகைச் சிறுமி எவ்வாறு எழுத இயலும். அவரை யார் எழுத வல்லார்?

மயில்: அவர் வர இசைவதற்கு உன்னிடம் என்ன உண்டு? சந்தனம் அத்தர் முதலிய வாசனைப் பூச்சுகளும், கண்கவர் அணிகளும் பொன்மய ஆடைகளும் நீ அணிந்திருக்கவில்லையே?

நாகு: தேம்பெருகு சந்தனமும் அத்தரும் தேடியிட மார்க்கமின்றி சாம்பலிட்டு (நீறிட்டு) மையல் செய்தார். அதனுல் நீறிட்டு மணிபூண்ட செயல் ஒன்றே அவரை என்னிடம் அழைக்கவல்லது.

மயில்: அவர் 'நாளை வருவேன்' எனச் சொல்லி நாள் கடத்திஞல் என்ன செய்வது?

நாகு: 'உம் காதலி கடலில் விழுந்தாள்' என்று கூக்குரலிடு. அதுவே போதும்.

மயில்: இப்படி விழுந்தவரைப்பற்றிக் கேட்டதும் அவர் வருவாரென்பது என்ன நிச்சயம்?

நாகு: (பிறவிக்) கடலில் விழுந்தோரைக் காக்கவே தான் 'சீரலைவாய்' என்ற கடற் செந்தியில் பெருமான் உளன். மேலும் அவருக்குச் 'சுவர்க்கலோக மீகாமன்' என்ற பேரும் உண்டு. அவர் 'ஏழு பிறவிக் கடலை ஏறவிடு நற்கருணை ஓடக்காரன்' என போற்றப்படுகிருர்.

முன்னொருகால் (சிற்றின்பக்) கடல் படிந்த எந்தை அருணகிரி அன்புக்கிசைந்து ஏற்றி முத்தியங் கரையிற் சேர்த்த முதல்வர். ஆதலின் அருணகிரிக்கருளிய ஐயனே! அடியேனையும் ஆண்டருள்' என்ற என் விண்ணப்பத்தைக் கூறுக' என்று மயிலின் அடியில் வீழ்ந்து வணங்கிஞள்.

---

எடுத்த பொய்க் கடத்தினைப் பொறுக்குமிப் பிறப்பறுத்து
எனக்கு நித்தமுத்தியைத் தரவேணும்.

மயில் செஞ்சிறிய கால்களால் விசாலத் தோகையை வட்டமிட்டு 'தத்திம் தத்திம்' என நிர்த்தமிட்டது. பளீரென பேரொளி ஒன்று மின்னியது. கரத்திலமர் வேலும், கட்டழகார் மொய்ம்பிலணி கடம்பும், சிரத்தில் முடியுமாய் அன்று கண்ட அண்ணலை இன்றும் கண்டு ஏத்தினன்.

'கலங்கேல்' என்ற பேரொலி கேட்டது. நாகு கண் விழித்தாள். கனவு நனவாயிற்று. மயிலேறு மழவன் புன்னகை தவழும் நன்மதி முகத்தினனாய் நாகையணைத்து நல்லருளீந்தான்.

## பன்னிரு திருமுறைகளில் இயற்கை நயங்கள்.

(க. சோமசுந்தர செட்டியார்.)

சைவ சமயாசாரியாராக விளங்கியவர் திருஞான சம்பந்தர். இவர் திருவவதாரம் செய்த நாடு சோழநாடு. நகரம் சீகாழியாகும். குலம் அந்தணர் குலமாகும். இவர்களைத் திருவள்ளுவர் "அந்தணர் என்போர் அறவோர்" என்றார். இவர் தம் தொழில்கள் ஆறு என்னும் நீதி நூல்கள். அவை யாவன: ஓதல் ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல். இங்கு நாம் சிறப்பாகப் பேச இருப்பது வேட்டல் அல்லது யாகம் (வேள்வி) செய்தல் பற்றியாம். வேள்வி செய்தால் நாட்டில் பஞ்சம் நீங்கும், குடிகள் செவ்வையாய் வாழ்வார் என்பது வழக்கு. இங்ஙனம் வேள்வி செய்து நாட்டில் கலி தலை காட்டாமல் செய்தார்- அக்காலத்தில் வாழ்ந்த சிதம்பரத் தீக்ஷிதர்கள். இதனைத் திருஞானசம்பந்தர் தாம் பாடிய கோயில்

---

கடப்பலர் சேர்கின் கிணிப்ரபை வீசங்
கழற்புனை நீதந்து அருள்வாயே.

தேவாரத்தில் பின்வருமாறு "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார் வாழ் தில்லை" என்று பாராட்டியுள்ளார். எரியோம்புதல் அல்லது யாகம் செய்தல் அந்தணர்கள் முக்கிய தொழிலாகும். இந்த வேள்வி மூவகைப் படும். ஒன்று பிறர் பொருட்டு (தக்ஷிணாக்னி); ஒன்று தன் பொருட்டு (காருகஸ்) பத்தியம். மற்றொன்று அதிகளின் தேவர்களின் பொருட்டாகும் (ஆகவனீயம்).

இவ்வருமைத் திருத்தொண்டைச் சிறப்பிக்க எண்ணினார் நம் தெய்வச் சேக்கிழார் பெருமான். இதனை எங்கேயமைத்தார்? அந்தணர் குலத்தில் தோன்றினார் நமது திருஞானசம்பந்தர். அவர் பிறந்தது சீகாழி. அவ்வூரிலுள்ள அவர் குலத்தவர் எல்லாம் வேள்வித் தொழிலைச் சிறப்பாகவும் செவ்வையாகவும் செய்து வந்தார். இது ஒரு வியப்பல்ல! அவ்வூரிலுள்ள மரங்களும் யாகம் செய்தன என்கிறார். எப்படி?

"பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரம்நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் நெடிதவ்வூர்
மரங்களும் ஆகுதிவேட்கும் தகையவென மணந்துளதால்."

[பெரிய புராணம்—திருஞான சம்பந்தர் புராணம் 7-வது பாட்டு.]

இதன் பொருளை உணர்ந்து இயற்கை நயத்தைக் கண்டு மகிழலாம். [விசாலமான விளைவோடு கூடிய வயலில் எழுந்த சிவந்த தாமரைமலராகிய பொங்கும் தீயினில் அவ் வயல் வரம்பிலே வளர்கின்ற தேமா மரத்தின் பழம் பிளந்ததனால் வரும் சாறாகிய நறு நெய்யானது நீண்ட இலைகளின் நுனியின் மூலம் இடைவிடாது ஒழுகுவதனால்,

தலத்தினிலே வந்துறப்பணி யாதன்
தனக்கினியார் தஞ்சபைதாராய்,

உரியமக்களே யன்றி மரங்களும் ஆகுதிவேட்கும் தன்மை யுடையன என்னும்படி அவ்வூர் (சீகாழி) பொருந்தி யுள்ளது.]

இயற்கை யழகைக் கண்டு களிக்கலாம். அந்தணர் ஓர் ஆசனத்தில் உட்கார்ந்துகொண்டு எதிரில் மணலைப் பரப்பி அதன்மீது நெருப்பை வளர்த்துத் தமது வலக்கரத் தால் பக்கத்தில் பாத்திரத்துள்ள வாசனைபொருந்திய பசு வின் நெய்யை (சுருக், சுருவம்) அகப்பைகளில் முகந்து ஓயாது எரியும் அக்னியில் வார்க்க அவ்வக்கினி கொழுந்து விட்டு வலஞ் சுழித்து எழும் என்பது வழக்கு.

அந்தணர் நிலையிலுள்ள மாமரங்கள் ஓங்கி வளர்ந் திருக்கின்றன. அவற்றிற் கெதிரில் மணற்பரப்பு போன் றுள்ளது நீர்நிலை. அதில் முளைத்து இருக்கும் தாமரை மொட்டுக்கள் அக்னியைத் தெரிவித்துக்கொண்டிருக்கின் றன. மரங்கள் தங்கள் கைகளாகிய கிளைகளின் மூலம் மேல்கிளையில் நன்றாய்க் கனிந்து ஒழுக்கவிட்டுக்கொண் டிருக்கும் மாம்பழத்தின் சாறுகிய நெய்யை இலைகளின் நுனிவழியாக நீர் நிலையிலுள்ள தாமரை மொட் டுக்களின் மீது சதா சொரிந்துகொண்டே யிருக்கின்றன. இப்படி ஓரறிவு உயிர்களாகிய மரங்களும் யாகம்செய்தன என்று சொன்னல், ஆறறிவுடன் கூடிய அந்தணர்கள் எப் படி யிருந்திருப்பார்கள் என்று நாம் சொல்லாமலே யமையும்.

(தொடரும்)

---

கலைப்புல வோர்பண் படைத்திட வோதுங்
கழற்புகழோதும் கலைதாராய்.

# ஸ்ரீவைஷ்ணவர் செல்வம் ஐந்தாம் வெள்ளணி விழா

(V. S. V.)

பரந்த மனப்பான்மை கொண்டவரான நந்தகோபரோ தனக்குப் புத்ரோத்ஸவம் ஆனதால் நீராடித் தூய துடுத்தி அலங்கரித்துக்கொண்டு சோதிடர்களையும் வேதியர்களையும் கூப்பிட்டு ஜாதகங் கணிக்கச் செய்து நன்மங்கல மந்திரங்களை ஓதுவித்து ஜாதகர்ம ஸம்ஸ்காரத்தையும், நாந்தீ சோபன பித்ரு பூஜையையும் இஷ்ட தெய்வாராதனத்தையும் சாஸ்திரங்களிற் சொல்லியவாறு செய்து முடித்தார்.

இரண்டு லக்ஷம் கோதானங்களும், பீதாம்பரங்களால் மறைக்கப்பட்ட எள்ளு நவரத்ன மலைகளையும் அடக்கிய பிறவற்றின் தானங்களும், செய்யப்பட்டன.

செல்வந் தூயதாவது கொடையினாலாம் :

காலத்தால் பூமி முதலாயனவும், நீராடலால் புறத்தழுக்கும், துலக்கலால் மாசு படிந்தனவும், ஜாதகர்மம், நாமகரணம் முதலியவற்றால், கர்ப்பத்தினின்று வெளிவந்த மகவின் பண்பட்ட அழகும், தவத்தால் ஐம்பொறிகள் முதலானவையும், வேள்விகளால் அந்தணர் முதலானோரும், கொடைகளால் செல்வங்களும், கிடைத்தது போதுமென்று தோன்றுமெண்ணமான அலந்தா புத்தியால், மனசும், ஆன்மக் கலையினால் ஆன்மாவும் சுத்தங்களாகின்றன" என்பர் சான்றோர்.

வேதமறிந்த பிராமணர்கள் வேத பாராயணஞ் செய்து கொண்டிருந்தனர். இருந்து ஏத்துவோர் புராணங்

---

பிறவிசடோறு மெனைநலியாத
படியுன தாள்கள் அருள்வாயே.

கள் சொல்லிக் கொண்டிருந்தனர். நின்றேத்துவோர் பிறந்த குடியைப் புகழ்ந்து கொண்டிருந்தனர். புகழுரையும் பாடல்களும், பல வாத்திய முழக்கங்களும் கேட்கப் பட்டுக் கொண்டிருந்தன.

ஆயர்பாடி முழுதும் கொடி, தோரணம், துளிர், துணி மலர் முதலியவற்றால் அலங்கரிக்கப்பட்டது. பசுக்கள், காளைகள், கன்றுகள், எல்லாமும் சிங்காரிக்கப்பட்டன. ஆயர்களனைவரும், நல்ல பட்டாடைகளையும், பொன்மணி யணிகளையும், நெட்டங்கி, தலைப்பாகைகளையும் அணிந்தனர். ஆய்ச்சிமாரும் வன்னப்பட்டுச் சேலைகளும், நவரத்னாபரணங்களும், மை, மலர், வாசனைத் திரவியங்களும் ஆகியவற்றால் அழகு செய்து கொண்டார்கள்.

ஆயர்களனைவரும் ஒருங்குகூடி "எங்களைப் பல்லூழி காக்க" என ஆசிமொழிகள் சொல்லிக் கொண்டே மஞ்சளெண்ணெய்த் துளிகளாலும், நீர்த் துளிகளாலும் கோபாலமூர்த்தியை நனைத்து உரக்கக் கூவினர். தயிர், பால், வெண்ணெய், நெய், நீர் என்ற இவற்றால் ஒருவரை ஒருவர் நனைத்துக் கொண்டார்கள். நந்தகோபரும், தன் மகவின் நலத்திற்காகவும், பெருமாளது ஆராதனத்திற்காகவும் தன்னிடம் வந்தவர்களுக்கெல்லாம் நற்பரிசுகளை நல்கினர்.

கம்ஸனுக்கு அஞ்சி ஆயர்பாடியில் வாழும் வசுதேவருடைய மனைவி யொருத்தியான ரோகிணிதேவியும் அலங்கரித்துக் கொண்டு உலாவிக் கொண்டிருந்தாள். ஆயர்பாடி அலைமகளது பூங்காவனமாயிற்று.

உயிரைக் கண்ட உடல் :

நந்தகோபர் இடையர்களை ஆயர்பாடியைக் காக்கு

---

குரவணி நீடும் புயமணி நீபங்
குளிர்தொடை நீந்து அருள்வாயே.

மாறு ஆணை பிறப்பித்துக் கம்ஸனுக்கு ஆண்டுக் கப்பத்தைச் செலுத்த மதுரைக்கு வந்து திறையளந்து அன்றங்கு இருந்தார். வசுதேவர் நந்தர் வந்ததையறிந்து அவரிருக்குமிடம் நாடிப்போக நந்தர் வசுதேவரைப் பார்த்து உயிரைக் கண்ட உடலெனத் தழுவி மகிழ்ந்து நின்றார்.

வசுதேவர் நந்தரைப் பார்த்து "இந்தக் கிழப் பருவத்தில் மகப்பேறு நீர் பெற்றது மகாபாக்கியமாகும். அன்பரைக் காண்பது எளிதிற் பெறக் கூடியதோ! நீர்ச் சுழலில் அகப்பட்ட துரும்பெனச் சுழன்று அந்நீரால் இழுக்கப்படும் செத்தை எனப் பல்வேறு செயல்களிலீடுபட்ட நண்பரிருவர்க்குச் சந்திப்பு நேரிடல் அரிதன்றோ! ஆயர்பாடி பல்வளங்களும், மிக்கு விளங்குகிறதா? நீர் என் தம்பி ஆவீர். எனது மகன் உம்மிடம் நலமே யுற்றுளானோ? பந்துக்கள் நலமடையும்போது அறம் பொருளின்ப மூன்றும் மனிதர்க்கு இன்பந்தருவ வாகின்றன. அவ்வுறவினர் துன்புறும்போது அம்முப்பொருள்களும் இன்பந் தருவனவாகத் தோன்றுவதில்லை, என்று குசலப் பிரச்சனஞ் செய்து நலமுசாவி நின்றார்.

முற்பிறவி வினையே இன்பத் துன்பங்கட்குக் காரணம் :

நந்தகோபர், வசுதேவரைப் பார்த்து, வசுதேவரே! உம்முடைய புதல்வரெல்லாரும் கம்ஸனாற் கொல்லப்பட்டார்கள். கடைசியிற் பிறந்த பெண் குழந்தையும் விண் சென்று விட்டதே. "ஆகூழ்வந்த காலத்தில் அனைத்தும் வருகின்றன. போகூல் வந்த காலத்தில் எல்லாமும் போய் விடுகின்றன" என்று ஊழின் வலியை அறிபவன் ஒருபோதும் துன்புறான். வருத்தப்பட வேண்டாம் என்று ஆறுதல் கூறினார்.

---

தவக்கடல் குளித்து இங்கு உனக்கடிமையுற்று
உன் தலத்தினில் இருக்கும்படி பாராய்.

ஆறுதல் பெற்ற வசுதேவர், நந்தகோபரிடம், திறைப் பொருளோ அளந்தாய் விட்டது. வந்த காரியமோ முடிந்தது. இங்குப் பல நாட்களிருக்கக் கூடாது. பெருச் செல்வர்கள் கொடுங்கோலரசனது அருகே யிருப்பது தீமை தருவது. நீங்களாயர்பாடிக்கு விரைவிற் செல்லவேண்டும் என்று சொல்லிச் சீக்கிரமே வண்டிகட்டிப் புறப்படவும் செய்து விட்டார்.

நந்தகோபர் வசுதேவரிடம் விடைபெற்றுக் கொண்டு ஆயருடன் வண்டியேறி ஆய்ர்பாடி போய்ச் சேர்ந்தனர்.

(தொடரும்)

"சென்னை அடியார் ஞாயிறு திருக்கூட்டம்"

## அறிவிப்பு.

16-10-49 ஞாயிற்றுக்கிழமை யன்று, சென்ற 58 ஞாயிற்றுக் கிழமைகளில் கூடிய திருக்கூட்டத்தில் ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்களால் தொடர்ந்து நடைபெற்ற "கந்தர் அநுபூதி" உணர்ச்சிவிளக்கம் பூர்த்தியடைகிறது. அன்று காலை அடியார்களும் ஏனையோரும் காலை 7-30-க்கு சென்னை கந்தகோட்டத்தில் குழுமின். அங்கு ஆண்டவன் வழிபாடு முடித்துக்கொண்டு கந்தர் அநுபூதி வீதி பாராயணத்துடன் ஸ்ரீ அருணகிரிநாதர் உருவப்படம் ஊர்வலம் வந்து சென்னைபூக்கடை ஸ்ரீ சென்னமல்லீஸ்வரர் அநுபூதி மண்டபத்தை அடைந்து அநுபூதி பாராயணம் பூர்த்தி அடையப்படும். இந்நன்னாளை யாவரும் மறக்காது, கலந்து கொள்ள வேண்டுகின்றனம்.

23-10-49 (ஞாயிறு) மகாஷஷ்டிவாரம், ஸ்ரீ திருப்புகழ் மணி அவர்களால் ஸ்ரீ அருணகிரிநாதர் அருளிய 'திருவகுப்புகள்' தொடர்ந்து நடத்தப்படும்.

## நூதன வர்ணப் படங்கள்




**ஸ்ரீ குமர குருபரன்**
14×20 - ரூ 1-4-0



**சைவசமயாசாரியர்**
# நால்வர்
14×20 - ரூ 1-0-0

**ஸ்ரீ அருணகிரி நாதர்**
14×20 - ரூ 1-8-0

215

" கண்டன வெலாம் குரு
காண்பன வெலாம் சீடன்
நீயே ஆகிய நான் ஞானம்
நீயலாத நான் மாயை "

No. 1506
அசோகா
MILD SCENTED
ASOKA
நெ. 1506

Reg. No. M. 5390

216




## ஷண்முகம் பிராண்டு

ஸ்டீல் டிரங்கு & சூட் கேஸ்கள்

நூதன முறைகளில் நீடித்த
உழைப்பிற்காக
உறுதியானதும் உத்திர
வாதமுமான சரக்குகள்.

**சி. ஞானசுந்தர நாயகர்**

341, எஸ்பிளனேட், சென்னை–1.
ஷோரூம்: 1-14, பேக்கர் தெரு,
சென்னை-1.

---

நம்பிக்கைக்கும் நாணயத்திற்கும் உங்கள் நன்மதிப்புபெற்ற
நகை வியாபாரிகள்

**"ஸ்வர்ண மாளிகை"**

## A. S. S. M. சோமசுந்தரம் செட்டியார் & Co.,

தங்க நகைகள், வெள்ளிப் பாத்திரங்கள் வியாபாரம்

124, தெற்காவணி மூல வீதி, - மதுரை.

TEL:—"FAITH" ESTD:—1924. PHONE:—113

---

நீங்கள் விரும்பக்கூடிய உயர்ந்த
உண்மையான ரகங்கள், பல
வகை பட்டு, நூல் ஆடை
களுக்கு கியாதிபெற்ற
நம்பிக்கையான
இடம்

## கருப்பண்ண முதலியார் ஸ்டோர்ஸ்

**பட்டு அண்டு கைத்தறி ஜவுளி வியாபாரம்**

53, கிடங்கு தெரு, மதராஸ் - 1.


Printed by T. Iyaswamy, Manager Haddon & Co.,
49, Badrian St., Madras 1. Phone No, 55044.
Edited & Published by S. Muthuswamy, 54, Bunder St., Madras.